**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.37/2020**

**நாள்.18.03.2026**

**பி.வா.சா. 1- சின்னத்துரை**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1994 ல் அருளானந்தம் தபசில் சொத்தைப் பொறுத்து உயில் எழுதினார் என்றால் சரிதான் ஆனால் உயில் தவறானது. மேற்படி உயிலில் தபசில் சொத்தில் ஒரு பகுதியைப் பொறுத்து 1வது பிரதிவாதிக்கு பாத்தியதை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயிலின் அடிப்படையில் 1வது பிரதிவாதி தபசில் சொத்தில் எந்த உரிமையும் கேட்கவில்லை என்றால் சரிதான் உயில் தவறானது. வழக்கில் சொல்லப்பட்ட மருதையா மனைவி பேரின்பம் எனது தாயார் அல்ல என்றால் சுந்தர்ராஜ் மனைவி பேரின்பம் எனது தாயார். வழக்குச் சொத்தில் 1வது பிரதிவாதி அருளானந்தத்தின் மகள் என்ற முறையில் உரிமை கேட்கிறார் என்றால் சரிதான். அருளானந்தத்தின் சட்டப்படியான வாரிசுகள் யார் என்றால் 2 பேர் அன்னத்தாய், பேரின்பம். வழக்குச் சொத்தில் இன்றைய தேதியில் தனிப்பட்ட முறையில் எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல உரிமை உண்டு. வழக்குச் சொத்தில் இன்றைய தேதியில் எனது பெயருக்கு பட்டா, பத்திரம் கிடையாது என்றால் சரியல்ல பட்டா உள்ளது. என் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1வது பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தைப் பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அருளானந்தத்திற்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது, அவரது மனைவி பெயர் என்ன என்றால் அருளானந்தத்திற்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என தெரியாது மனைவி பெயர் தாயம்மாள் என்பது மட்டும் தெரியும். தாயம்மாள் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 1987 ல். அருளானந்தம், தாயம்மாள் இறப்புச் சான்று, வாரிசு சான்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். அருளானந்தம் தகப்பனார் பெயர் என்ன என்றால் தெரியாது. அருளானந்தம் தகப்பனார் பெயர், தாயார் பெயர் பற்றி 1வது பிரதிவாதிக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

அருளானந்தம் உடன்பிறந்தவர்கள் பற்றி 1வது பிரதிவாதிக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் 1வது பிரதிவாதிக்கு எதன் அடிப்படையில் உரிமை உண்டு என்ற விபரம் 1வது பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொன்னால் தான் தெரியும் என்றால் சரிதான். 1வது பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு பகுதியில் நான் கட்டியுள்ள வீட்டின் தீர்வை ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் அருளானந்தம், பேரின்பம் பெயரில் உள்ளது. அருளானந்தத்தின் வாரிசு சான்றிதழில் 2 மகள்கள் இருப்பதாகவும், அவர்கள் பெயர் அன்னத்தாய், இன்பம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டின் தீர்வை ரசீது அருளானந்தத்தின் பெயரிலும், இன்பம் பெயரிலும் உள்ளது என்றால் சரியல்ல அருளானந்தம், பேரின்பம் பெயரில் உள்ளது. அருளானந்தத்தின் உடன்பிறந்த சகோதரர் ஆசீர்வாதம் என்ற சந்தானம் என்றால் எனக்குத் தெரியாது. 1957 ல் அருளானந்தம், ஆசீர்வாதம் என்ற சந்தானம் சேர்ந்து ராமசாமி நாயக்கர் மனைவி ஆவுடையம்மாளுக்கு வேறு ஒரு சொத்தைப் பொறுத்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. அருளானந்தம் தாவா சொத்தில் 1 சென்ட்டை பார்வதி அம்மாளுக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான் அது பொதுநடைபாதை என எழுதிக்கொடுத்தார். அவ்வாறு எழுதப்பட்ட ஆவணத்தில் பொதுநடைபாதை என எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அருளானந்தம் தாவா சொத்தில் 1 சென்ட்டை பார்வதி அம்மாளுக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை செல்லாது என சொல்லி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல RDO அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளேன். அருளானந்தம் தாவா சொத்தில் 1 சென்ட்டை பார்வதி அம்மாளுக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை செல்லாது என சொல்லி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது முந்தைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1970 முதல் 2019 வரை வில்லங்கம் எடுத்து பார்த்ததாக சொன்னேன் வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது அதை அவர் நீதிமன்றத்தில் கொடுத்தாரா என தெரியாது.

வழக்கு 2 வது தபசில் சொத்தினை வாதியின் தகப்பனார் பேச்சிமுத்து 1999 ம் ஆண்டு அருளானந்தத்தின் உடன்பிறந்த சகோதரர் ஆசீர்வாதம் என்ற சந்தானத்திடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் மேற்படி ஆவணம் எழுதப்பட்ட விபரம் தெரியும். 1970 முதல் 2019 வரை எடுத்துப் பார்த்த வில்லங்க சான்றிதழில் மேற்படி பேச்சிமுத்து 1999 ம் ஆண்டு அருளானந்தத்தின் உடன்பிறந்த சகோதரர் ஆசீர்வாதம் என்ற சந்தானத்திடமிருந்து கிரையம் வாங்கிய ஆவணத்தின் குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல ஆவணம் பற்றிய விபரம் இல்லை. அவ்வாறு மேற்படி ஆவணம் பற்றிய விபரம் இல்லாதது குறித்து 1970 முதல் 2019 வரை எடுத்துப் பார்த்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால்தான் உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல. 5 சென்ட்டில் 1 சென்ட் போக 4 சென்ட்டுக்கு சர்வே எண்.399/1C4A யின் கீழ் 1 வது பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1 வது பிரதிவாதி பெயரிலான பட்டாவை ரத்து செய்து, வாதியின் தந்தை பெயரை சேர்க்கக்கோரி கொடுத்த மனுவின் அடிப்படையில் பேச்சிமுத்து பெயர் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். 1 வது பிரதிவாதி வாதியின் தகப்பனார் கிரையம் வாங்கிய ஆவணம் மோசடியானது என புகார் கொடுக்கப்பட்டு வாதியின் தந்தை பெயர் பட்டாவில் இருந்து நீக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாதியின் தந்தை பெயர் பட்டாவில் இருந்து நீக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. பேச்சிமுத்து 1999 ம் ஆண்டு அருளானந்தத்தின் உடன்பிறந்த சகோதரர் ஆசீர்வாதம் என்ற சந்தானத்திடமிருந்து கிரையம் வாங்கிய ஆவணத்தின் விபரம் எப்போது தெரியவந்தது என்றால் பேச்சிமுத்து பெயரை சேர்த்து கூட்டுப்பட்டா ஆன பிறகு 20 நாட்களில் தெரியவந்தது. பேச்சிமுத்து பெயரை சேர்த்து கூட்டுப்பட்டாவாக இருக்கும்போது பேச்சிமுத்து வாதிக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. பேச்சிமுத்து வாதிக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த விபரம் தெரிந்த பிறகும், 1 வது பிரதிவாதி 1999 தேதியிட்ட பேச்சிமுத்து பெயரிலான ஆவணம் மற்றும் பேச்சிமுத்து வாதிக்கு எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக்கேட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

1999 தேதியிட்ட பேச்சிமுத்து பெயரிலான ஆவணம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் என்றால் தெரியாது. 1999 தேதியிட்ட பேச்சிமுத்து பெயரிலான ஆவணம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை மோசடியானது என்று சொல்ல 4 வது பிரதிவாதிக்கு அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவில் உள்ள வாதியின் தகப்பனார் பெயரை நீக்கி, 4 வது பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். 4 வது பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் ஆவணத்தில் திருத்தம் உள்ளது என ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த மனுவில் 4 வது பிரதிவாதியால் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்றால் தெரியாது. கூட்டுப்பட்டாவில் உள்ள வாதியின் தகப்பனார் பெயரை நீக்கி, 4 வது பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு முறையான விசாரணை நடத்தாமல் எனக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழங்கப்பட்ட மோசடி உத்தரவு என்றால் சரியல்ல. 1999 தேதியிட்ட பேச்சிமுத்து பெயரிலான ஆவணம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை மோசடியானது என்று சொல்ல நீதிமன்றத்திற்கு தான் அதிகாரம் உண்டு, 4 வது பிரதிவாதிக்கு அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல. 4 வது பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்ட பட்டா ரத்து உத்தரவின் அடிப்படையில் 1 வது பிரதிவாதி எவ்வித உரிமையும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி தரப்பில் பிறப்பிக்கப்பட்ட ஆவணங்கள் செல்லாது என எதிர்கோரிக்கை பரிகாரங்கள் கேட்கவில்லை என்றால் வழக்கறிஞருக்கு தான் அது பற்றிய விபரங்கள் தெரியும். 1 வது பிரதிவாதி தகப்பனார் அருளானந்தத்திற்கு 5 சென்ட் இடத்தில் 2-1/2 சென்ட் தான் பாத்தியம் என்றால் சரியல்ல பட்டாவில் 2-1/2 சென்ட் உள்ளது பாதை போக மீதி இடம் "அ" பதிவேட்டில் உள்ளது. அருளானந்தம் பாதைக்கு பார்வதிக்கு 1 சென்ட் கொடுத்தது போக மீதி 1-1/2 சென்ட் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. அருளானந்தத்திற்கு சொத்துக்கள் இருந்தால் அவரது வாரிசுகளுக்கு உரிமை உண்டு என்றால் சரிதான்.

அருளானந்தம் எழுதிய உயிலை 1வது பிரதிவாதி ஏற்றுக்கொள்ள மறுத்ததால் அருளானந்தம் விட்டுச்சென்ற சொத்துக்கள் இருந்தால் அவரது வாரிசுகளுக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். அருளானந்தம் எழுதிய உயிலில் கிழக்கு பக்க மாலாக ஆசீர்வாதம் என்ற சந்தானம் பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் உயில் தவறானது. அருளானந்தம் எழுதிய உயிலை 1வது பிரதிவாதி ஏற்றுக்கொண்டால், ஆசீர்வாதம் என்ற சந்தானத்திற்கு சொத்தில் உரிமை இருப்பது தெரியவந்துவிடும் என்பதால் அருளானந்தம் எழுதிய உயிலை 1வது பிரதிவாதி மறுக்கிறார் என்றால் சரியல்ல. அருளானந்தம் எழுதிய உயிலை 1வது பிரதிவாதி மறுப்பது சம்பந்தமாக 1வது பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொன்னால் தான் தெரியும் என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் அருளானந்தத்திற்கு பாத்தியப்பட்ட 1-1/2 சென்ட்டில் நான், என் தாயார் வீடு கட்டி குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல 2-1/2 சென்ட்டில் நான், என் தாயார் வீடு கட்டி குடியிருக்கிறோம். நான் வழக்குச் சொத்தில் கட்டியுள்ள வீட்டின் கட்டிட அளவு என்ன என்றால் தெரியாது. நான் வழக்குச் சொத்தில் கட்டியுள்ள வீட்டின் கட்டிட அளவு 1வது பிரதிவாதிக்கு தெரியுமா என்றால் அவருக்கு தெரியுமா என எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தில் கட்டியுள்ள வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் தெரியாது. வழக்குச் சொத்தில் கட்டியுள்ள வீடு எந்த ஆண்டு முதல் தீர்வை செலுத்தப்பட்டது என்றால் 2015 முதல் தீர்வை செலுத்தப்பட்டது. வழக்குச் சொத்தில் உள்ள வீட்டில் 60 ஆண்டுகளாக குடியிருப்பதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் 1வது பிரதிவாதிக்கு உரிமை இருப்பதாக கட்சி செய்துள்ள நிலையில், 1வது பிரதிவாதி சாட்சியம் அளிக்காமல், நான் மட்டும் சாட்சியம் அளித்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் 1வது பிரதிவாதியின் வாரிசு என்பதை 1வது பிரதிவாதி தான் நீதிமன்றம் வந்து சொல்ல வேண்டும் என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் 1வது பிரதிவாதி தாவா சொத்தில் உரிமை கேட்க முடியாது என்றால் சரியல்ல. 2 வது தபசில் சொத்து வாதிக்கு பதிவு ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ன் அதிகார பலத்தைக் கொண்டு வாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய

வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து சாட்சியம்அளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உரிமை இல்லாமல் வாதி அனுபவத்திற்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகள் எனக்கு சாதகமாக இருப்பதால் வாதி நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல்செய்து 2 வது தபசில் சொத்து தனித்துப் பாத்தியப்பட்டது என பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 யார் பெயரில் உள்ளது என தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல மழையில் நனைந்துள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 வழங்கப்பட்டபிறகு கூட்டுப்பட்டா வாதியின் தகப்பனார் பெயர் சேர்க்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 பட்டா ரத்து செய்வதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு RDO அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ல் ஆவணத்தை எழுதிய கையெழுத்தும், புல எண் குறிப்பிட்டுள்ள கையெழுத்தும் மாறுபட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ல் சொத்தின் உரிமை மூலம் பற்றி விசாரணை நடக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால், பட்டா ரத்து செய்வதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு RDO அலுவலகத்தில் உத்தரவு பிறப்பிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 புகைப்படத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 அறிவிப்பிற்கு வாதியால் பதில் அனுப்பப்பட்டுவிட்டது என்றால் தெரியாது. வாதி கேட்டுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

<u>**4 வது பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 19:11:36 +0530